**THE GANDHIGRAM RURAL INSTITUTE**
**(Deemed to be University)**
**GANDHIGRAM -624 302, DINDIGUL DISTRICT - TAMILNADU**
(Ministry of Education, Govt. of India)
Accredited by NAAC with 'A' Grade (3rd Cycle)

*All communication should be addressed to the Registrar by designation and not by name*

EPABX No : (0451) 2452371-2452376
Phone : (0451) 2452323
Fax : (0451) 2454466
E.mail : grucc@ruraluniv.ac.in
Website : www.ruraluniv.ac.in

**Dr V.P.R.SIVAKUMAR**
Registrar

Ref: GRI(DTBU)/Res.Cell/S1&S2/Sch./2021-22 11.10.2021

## CIRCULAR

Sub: Tamil Nadu Government – Chief Minister General Fund Scholarship for Professional Course students - reg.

Ref: ந.க.எண்.17544/2021/எல்.1, நாள்.02.08.2021

*****

In view of the above subject the Tamil Nadu Government is offering a Chief Minister General Fund Scholarship for Professional Course students for the year 2021-22. The eligible students with the following conditions may download the application forms through online link ***www.dindigul.tn.nic.in***

**Eligibility:-**

1. Proof of admission through the single window system.
2. +2 Marks Sheet
3. The family Members Age, Education Qualification along with the annual income should be less than **Rs.72,000/-** *(all sources)*
4. Student should belong to Tamil Nadu
5. Nativity Certificate

For further information available on **www.dindigul.tn.gov.in**.

All the Deans/HoDs/Directors are requested to display it in the **NOTICE BOARD.** Students Welfare Coordinators to inform the students in the concerned department.

V. P. [signature] 11/10/2021
REGISTRAR

Encl: As above.

To: All the Deans/HoDs/Directors/Students Welfare Coordinators/GRI/File.

Cc: The Director, Computer Centre: - with a request to upload in the intra-mail/ GRI Students' Corner/Reservation Cell portal/Circular.

அனுப்புநர்
மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கல்.

GRI
REGISTRAR'S
CABIN
1 OCT 2021
2046
Res. cell
RESERVATION CELL
Section Date 4/10/21
SO AR

பெறுநர்,

1. முதல்வர்,அண்ணா பல்கலைக் கழகம், திண்டுக்கல்
2. முதல்வர், அறிஞர் அண்ணா பொறியியல் கல்லூரி, மேட்டுப்பட்டி, திண்டுக்கல்
3. முதல்வர், என்.பி.ஆர். பொறியியல் கல்லூரி, நத்தம்
4. முதல்வர், எஸ்.எஸ்.எம், பொறியியல் கல்லூரி, திண்டுக்கல்
5. முதல்வர், ஆர்.வி.எஸ்.பொறியியல் கல்லூரி, திண்டுக்கல்
6. முதல்வர்,ஆர்.வி.எஸ் (அறக்கட்டளைக் குழு) பொறியியல் கல்லூரி, திண்டுக்கல்
7. முதல்வர், வீரம்மாள் பொறியியல் கல்லூரி, கே.சித்தையன்கோட்டை, ஆத்தூர்
8. முதல்வர், எஸ்.பி.எம். பொறியியல் கல்லூரி, திண்டுக்கல்
9. முதல்வர், பி.எஸ்.என்.ஏ.பொறியியல் கல்லூரி, திண்டுக்கல்
10. முதல்வர், ஸ்ரீ சுப்பிரமண்யா பொறியியல் கல்லூரி, பழனி
11. முதல்வர், கிறிஸ்டியன் பொறியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம்
12. முதல்வர், ஜெய்னி பொறியியல் கல்லூரி, திண்டுக்கல்
13. முதல்வர், காந்திகிராம (தன்னாட்சி) பல்கலைக் கழகம், திண்டுக்கல்

ந.க.எண்.17544/2021/எல்.1, நாள்.02.08.2021

அய்யா/ அம்மையீர்,

பொருள்: **உயர்கல்வி** — கல்வி உதவித் தொகை — தொழிற்கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கும் திட்டம் - ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் சேர்க்கை பெறும் தகுதியுள்ள மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை பெற விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை: 1.அரசாணை (நிலை) எண்.252, உயர்கல்வி(ஜே2) துறை, நாள்.31.07.2003

2.அரசாணை (நிலை) எண்.258, உயர்கல்வி(ஜே2) துறை, நாள்.24.07.2009

3.அரசாணை (நிலை) எண்.148, உயர்கல்வி(ஜே2) துறை, நாள்.24.07.2012

4.அரசாணை (நிலை) எண்.70, உயர்கல்வி(ஜே2) துறை, நாள்.3.3.2016

5.அரசாணை (நிலை) எண்.25, உயர்கல்வி(ஜே2) துறை, நாள்.30.1.2018

6.அரசு முதன்மைச் செயலாளர், உயர் கல்வித் துறை, அவர்களின் நே.மு.க.எண்.7815/ஜே2/2021-1, நாள்.9/7/2021

******

பார்வையில் காணும் அரசாணைகளின்படி, தொழிற்கல்வி பயிலும் ஏழை மாணவர்களின் படிப்பினை தொடர முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு வருடமும் மிகவும் வறிய நிலையில் உள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 200 மாணவர்களுக்கு அவர்கள் படிக்கும் காலத்தில் ஒரு முறை மட்டும் தலா ரூ.50,000/- வழங்கவும், அதற்கான நெறிமுறைகளும் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர்களால் உரிய விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு, முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு அனுப்பப்பட்டு, சம்மந்தப்பட்ட துறையால் நிதியுதவி மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்படுகிறது.

<u>இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுவதற்கான நிபந்தனைகள்:-</u>

1. அரசின் முகமையினால் நடத்தப்படும் ஒற்றைச் சாளர முறை வழியாக சேர்க்கை பெற வேண்டும்.
2. நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்க்கை பெறும் மாணவர்கள் நிதியுதவி தொகை பெற இயலாது.
3. தமிழ்நாட்டில் இருப்பிட சான்று பெற்றவராக இருக்க வேண்டும்.
4. குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 72,000/-த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
5. முதல் தலைமுறைப் பட்டதாரி கல்விக் கட்டணம் பெறும் மாணவர்கள், கல்வி உதவி பெறும் விவசாயிகளின் மகன்கள் மற்றும் மகள்கள், கல்வி உதவி பெறும் இறந்த அரசு பணியாளர்களின் மகன்கள் மற்றும் மகள்கள், கல்வி உதவி பெறும் பணியிலிருக்கும் இராணுவ வீரர்களின் மகன்கள் மற்றும் மகள்கள், கல்வி உதவி பெறும் முன்னாள் இராணுவ வீரர்களின் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெற இயலாது.

மிகவும் வறிய நிலையில் உள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் உதவித்தொகை பெறுவது அவர்களின் உரிமை என்றும், அத்தகைய உரிமைகள் அவர்களுக்கு உள்ளது என்பதை மக்களுக்கு தெரிவிக்க வேண்டியது அரசின் கடமை என்றும் தெரிவித்து, அரசு வழங்கும் உதவித்தொகைகள் குறித்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு அந்தந்த கல்வி நிறுவனங்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தி, மாணவர்கள் தொழிற்கல்வி பயில அவர்களை ஊக்குவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரசு முதன்மை செயலாளர், உயர்கல்வித்துறை அவர்களிடமிருந்து பெறப்பட்ட பார்வை 6ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வேண்டி அரசால் பெறப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகிறது, ஆண்டுதோறும், ஒற்றைச் சாளர முறையில் சேர்க்கை பெறும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் சேர்க்கை மிக அதிகளவில் இருக்கும்போது, அம்மாணவர்களிடமிருந்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரும் விண்ணப்பங்கள் நடப்பு கல்வியாண்டில் குறைவாக உள்ளதால், இத்திட்டம் குறித்த விழிப்புணர்வினை மாணவர்களுக்கும் / பெற்றோர்களுக்கும் ஏற்படுத்தி உரிய எண்ணிக்கைணிலான விண்ணப்பங்களை மாணவர்களிடமிருந்து பெற்று ஆய்வு செய்து, முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு அனுப்புவதற்கு ஏதுவாக உரிய ஆவணங்களுடன் உரிய விண்ணப்ப படிவத்தில் 30 நாட்களுக்குள் அனுப்பிவைத்திட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பார்வை 1-ல் காணும் அரசாணையில், கல்வி உதவித் தொகை பெற விண்ணபிக்கும் மாணவர்கள் கீழ்காணும் சான்றிதழ்களை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடம் சான்றொப்பம் பெற்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மனு செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. பணிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல்.
2. தமிழ்நாட்டில் வசிப்பவர் என்பதற்கான நிரந்தரச் சான்று
3. குடும்பத் தலைவரின் ஆண்டு வருமானச் சான்று.
4. குடும்ப உறுப்பினர்களின் வயது, கல்வித் தகுதி மற்றும் வருமானச் சான்று.
5. ஒற்றைச் சாளர முறை வழியாக சேர்க்கை பெற்றதற்கான சான்று.
6. இருப்பிடச் சான்று.

திண்டுக்கல் மாவட்ட வலைதளமான <u>www.dindigul.tn.nic.in-ல்</u> முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தொழிற்கல்வி பயிலும் ஏழை மாணவ/மாணவிகளுக்கு உதவித்தொகை ரூ.50,000/- வழங்குவதற்கான விண்ணப்ப படிவம் என்ற தலைப்பில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

முதலமைச்சரின பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் நிதியுதவி கோரும் விண்ணப்பங்கள் நடப்பு கல்வியாண்டில் குறைவாக உள்ளதால், இத்திட்டம் குறித்த விழிப்புணர்வினை மாணவர்களுக்கும் / பெற்றோர்களுக்கும் ஏற்படுத்தி உரிய எண்ணிக்கைணிலான விண்ணப்பங்களை மாணவர்களிடமிருந்து பெற்று ஆய்வு செய்து, முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு அனுப்புவதற்கு ஏதுவாக உரிய ஆவணங்களுடன் உரிய விண்ணப்ப படிவத்தில் 30 நாட்களுக்குள் அனுப்பிவைத்திட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியருக்காக,
தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி),
திண்டுக்கல்.